Registered as a News Paper

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 03   திருவள்ளுவர் ஆண்டு 2024   தை 29   (11-02-1993)   வியாழக்கிழமை   ஓசை 359

## சிறப்புத் தகைமை பெற்ற மாணவருக்கு பாராட்டு

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்ட தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் தேசிய மட்டம், மாவட்ட, கோட்ட மட்டங்கள் ஆகியவற்றில் சிறப்புத் தகைமைகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளன. தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நடத்தும் இந்தப் பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழா யாழ். (6 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி பாதை திறக்கும் விவகாரம்

# புலிகளுடன் பேசிய பின்னரே முடிவு

## ஐ.நா. அதிகாரிகளுடன் சனியன்று பேச்சு

[யாழ்ப்பாணம்]

கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதை திறப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் பேசிய பின்னரே இப்பாதை தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இப்பேச்சுவார்த்தை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும் எனவும் தெரியவருகின்றது.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பது தொடர்பாக சிறிலங்கா அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தியுள்ள அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் அடுத்த கட்டமாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்கென ஐ.நா. உயர் ஸ்தானிகராலய ஜெனிவா தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உட்பட ஒரு குழுவினர் யாழ் வருகை தந்து எதிர்வரும் சனிக்கிழமை இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இவ்வதிகாரிகள் புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அறிக்கை ஒன்றைத் தயாரித்து, ஜெனிவா தலைமையகத்திற்கு எடுத்துச் செல்வர் என்றும், பின்னர் அரசுடனும் புலிகளுடனும் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தீவிரபரிசீலனை செய்யப்படும் எனவும் தெரியவருகிறது.

இப்பரிசீலனையின் முன்னேற்றகரமான அம்சங்கள் உள்ளதாகக் கருதப்படும் பட்சத்தில் மீண்டும் இலங்கைக்கு வரும் ஐ.நா. அதிகாரிகள் அரசாங்கத்துடனும், புலிகளுடனும் பேச்சுக்கள் நடத்தி இறுதி முடிவுகளை மேற்கொள்வர் எனவும் தெரியவருகின்றது.

## ஒப்பந்தம் செய்யப்படவில்லை

## ஐ.நா. தூதரக அதிகாரி மறுப்பு

### உணவு லொறிகள் பற்றி முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

கேரதீவு- சங்குப்பிட்டி பாதையைத் திறப்பதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது என்ற செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலய யாழ் அலுவலக அதிகாரி கூறினார் என ...

யான ஓர் முடிவு எடுக்கப்பட்டிருக்குமானால் அது தனக்கு நிச்சயம் தெரிந்திருக்கும் எனவும் கூறினார்.

சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் 32 லொறிகளில் ஐ.நா. வாகன அணியில் முதலில் உணவுப் ...

எனவும் நேற்றைய உதயன் நாளிதழில் வெளிவந்த செய்திகளை அவர் முற்றாக மறுத்துள்ளார். இச்செய்திகள் மக்களை மிகவும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

கேரதீவு- சங்குப்பிட்டிப் பாதையை பொதுமக்களின் ...

வன்னி, முல்லை, மணலாறு மாவட்டங்களில்

## தொழில் முயற்சிகளை பதிய நிதித்துறையினர் கோரிக்கை

வன்னி, முல்லை / மணலாறு மாவட்டங்களில் வாணிபம் / தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் தமது வாணிபம் / தொழில் முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையில் பதிவுக்கட்டணம் ரூபா 100 செலுத்திப் பதிவு செய்து கொள்ளும்படியும், பதிவு செய்யாத எந்தவொரு வாணிபமும் தொழில் முயற்சியும் தொடர்ந்து நடாத்துவதற்கு இசைவளிக்கப்பட மாட்டாதென்றும் வன்னி / முல்லை. மாவட்ட நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் நா. முத்தழகன் தெரிவித்துள்ளார்.

முல்லை/மணலாறு மாவட்டத்தினர் 16-2-93 முதல் 18-2-93 வரை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையும் பாண்டியன் செயலகம், முல்லைவீதி புதுக்குடியிருப்பில் பதிவுசெய்யலாம். வன்னிமாவட்டத்தினர் 19-2-93 முதல் 25-2-93 வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் வருவாய்ப் பகுதிச் செயலகம், யாழ் வீதி கிளிநொச்சியிலும் பதிவு செய்து கொள்ளலாம்.

வாணிபம் தொழில் முயற்சியென்பது நிரந்தர வாணிபர்களை மட்டுமல்லாது நடமாடும் வாணிபர்களையும், தரகர்கள், போக்குவரத்துச் சேவை, பிரயாண சேவை, மற்றும் உயர் தொழில், கண்ணியத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோரையும் உள்ளடக்கும்.

## க. பொ. த. உயர்தரம் மார்ச் 31 விண்ணப்ப முடிவு

1993 ஆம் ஆண்டிற்குரிய கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பங்கள் இவ்வாரத்தில் இருந்து பரீட்சைக்கு ... வைக்கமுடியுமெனவும், விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி மார்ச் மாதம் 31 ஆம் திகதி எனவும் இதற்கான பரீட்சைகள் ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக ...

## தடுப்பு ஊசி கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்குத் தேவையான அளவு விசர்நாய் நோய் தடுப்பு ஊசி (ஏ.ஆர்.வி) கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு இத்தடுப்பு ஊசி வரவில்லை என்பதினால் தேவைப்படும் தடுப்பு ஊசியை சுகாதார அத்தியட்சகர் வழங்க உள்ளதாக தெரிய வருகின்...

வன்னி, முல்லை, மணலாறு மாவட்டங்களில்

## தொழில் முயற்சிகளை பதிய நிதித்துறையினர் கோரிக்கை

வன்னி, முல்லை / மணலாறு மாவட்டங்களில் வாணிபம் / தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் தமது வாணிபம் / தொழில் முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையில் பதிவுக்கட்டணம் ரூபா 100 செலுத்திப் பதிவு செய்து கொள்ளும்படியும், பதிவு செய்யாத எந்தவொரு வாணிபமும் தொழில் முயற்சியும் தொடர்ந்து நடாத்துவதற்கு இசைவளிக்கப்பட மாட்டாதென்றும் வன்னி / முல்லை. மாவட்ட நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் நா. முத்தழகன் தெரிவித்துள்ளார்.

முல்லை / மணலாறு மாவட்டத்தினர் 16-2-93 முதல் 18-2-93 வரை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரையும் காண்டியன் செயலகம், முல்லைவீதி புதுக்குடியிருப்பில் பதிவுசெய்யலாம். வன்னிமாவட்டத்தினர் 19-2-93 முதல் 25-2-93 வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் வருவாய்ப் பகுதிச் செயலகம், யாழ் வீதி கிளிநொச்சியிலும் பதிவு செய்து கொள்ளலாம்.

வாணிபம் தொழில் முயற்சியென்பது நிரந்தர வாணிபர்களை மட்டுமல்லாது நடமாடும் வாணிபர்களையும், தரகர்கள், போக்குவரத்துச் சேவை, பிரயாண சேவை, மற்றும் உயர் தொழில், கண்ணியத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோரையும் உள்ளடக்கும்.

## க. பொ. த. உயர்தரம் மார்ச் 31 விண்ணப்ப முடிவு

1993ஆம் ஆண்டிற்குரிய கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பங்கள் இவ் வாரத்தில் இருந்து பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கமுடியுமெனவும், விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி மார்ச் மாதம் 31 ஆம் திகதி எனவும் இதற்கான பரீட்சைகள் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

## ஐ.நா. அதிகாரிகளுடன் சனியன்று பேச்சு

[யாழ்ப்பாணம்]

கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதை திறப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் பேசிய பின்னரே இப்பாதை தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இப்பேச்சுவார்த்தை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும் எனவும் தெரியவருகின்றது.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத்திறப்பது தொடர்பாக சிறிலங்கா அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தியுள்ள அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் அடுத்த கட்டமாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்கென ஐ.நா உயர் ஸ்தானிகராலய ஜெனிவா தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உட்பட ஒரு குழுவினர் யாழ் வருகை தந்து எதிர்வரும் சனிக்கிழமை இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இவ்வதிகாரிகள் புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அறிக்கை ஒன்றைத் தயாரித்து, ஜெனிவா தலைமையகத்திற்கு எடுத்துச் செல்வர் என்றும், பின்னர் அரசுடனும் புலிகளுடனும் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தீவிரபரிசீலனை செய்யப்படும் எனவும் தெரியவருகிறது.

இப்பரிசீலனையில் முன்னேற்றகரமான அம்சங்கள் உள்ளதாகக் கருதப்படும் பட்சத்தில் மீண்டும் இலங்கைக்கு வரும் ஐ.நா. அதிகாரிகள் அரசாங்கத்துடனும், புலிகளுடனும் பேச்சுக்கள் நடத்தி இறுதி முடிவுகளை மேற்கொள்வர் எனவும் தெரியவருகின்றது.

## தடுப்பு ஊசி கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்குத் தேவையான அளவு விசர்நாய் நோய் தடுப்பு ஊசி(ஏ.ஆர்.வி) கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு இத்தடுப்பு ஊசி வரவில்லை என்பதினால் தேவைப்படும் தடுப்பு ஊசியை சுகாதார அத்தியட்சகர் வழங்க உள்ளதாக தெரிய வருகின்றது. (நி)

## ஒப்பந்தம் செய்யப்படவில்லை ஐ.நா. தூதரக அதிகாரி மறுப்பு

### உணவு லொறிகள பற்றி முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

கேரதீவு- சங்குப்பிட்டி பாதையைத் திறப்பதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது என்ற செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என அகதிகளுக்கான ஐ. நா. உயர்தானிகராலய யாழ் அலுவலக அதிகாரி கூறினார் என "புலிகளின்குரல்" வானொலி நேற்றிரவு தனது செய்தியில் தெரிவித்தது.

இவ்வாறு தெரிவித்த அவ் அதிகாரி கடந்த 7 ஆம் திகதி கொழும்பில் ஐ.நா அதிகாரிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும இடையே ஒப்பந்தம் எதையும் கைச்சாத்திடும் எண்ணம் இருக்கவில்லை. அவ்வாறு கைச்சாத்திடப் படவும் இல்லை. அங்ஙனம் உதயன் நாளிதழில் வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானது. அன்றைய தினம் தான் கொழும்பில் இருந்ததாகவும் அப்படியான ஓர் முடிவு எடுக்கப்பட்டிருக்குமானால் அது தனக்கு நிச்சயம் தெரிந்திருக்கும் எனவும் கூறினார்.

சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் 32 லொறிகளில் ஐ.நா. வாகன அணியில் முதலில் உணவுப் பொருள்கள் எடுத்துவரப்படும் எனவும் நேற்றைய உதயன் நாளிதழில் வெளிவந்த செய்திகளை அவர் முற்றாக மறுத்துள்ளார். இச் செய்திகள் மக்களை மிகவும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

கேரதீவு- சங்குப்பிட்டிப் பாதையை பொதுமக்களின்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## யுனிசெவ் அதிகாரி கூற்று; பாதிக்கப்பட்டோர் சினம்

(லண்டன்)

சென்ற ஆண்டு இறுதியில் இலங்கைக்கு வந்திருந்த "யுனிசெவ்" நிர்வாக இயக்குனர் ஜேம்ஸ் கிறாட் இலங்கையின் உள்நாட்டு போர் மற்றைய இடங்களில் இடம்பெறும் சண்டைகளைப் போலன்றி நாகரிமானது என்று தெரிவித்துள்ளார் இந்த போரின் கொடுமைகளை அனுபவித்தவர்களுக்கு அவரது இக்கூற்று கடும் சினத்தை ஏற்படுத்தியது"

[5 ஆம் பக்கம் பார்க்க]

## கரை ஒதுங்கிய 6 சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

(கிளிநொச்சி)

கிளாலி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் படகுகள் மீது மேற்கொண்ட தாக்குதலில் பலியான ஆறு பேரின் பெயர் விபரங்கள் கிடைத்துள்ளன.

கடந்த வாரம் நடைபெற்ற இத்தாக்குதலின்போது கொல்லப்பட்ட எட்டுப் பேரது சடலங்கள் ஆனைக்கோட்டைப் பகுதியில் கரை ஒதுங்கிய செய்தி நேற்று வெளியானது தெரிந்ததே.

மேற்படி சடலங்களில் ஆறு சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்டவர்களின்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## சர்வதேச மகளிர் தினம்; தயாராகிறது தமிழீழம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ரீதியாக அடுத்த மாதம் எட்டாம் திகதி அனுஷ்டிக்கப்பட இருக்கும் அனைத்துலக மகளிர் தினத்திற்காக தமிழீழம் தயாராகிவருகிறது.

சர்வதேசமகளிர் தினத்திற்காக தமிழீழ மகளிரை தயார் படுத்துவதிலும் இத்தினத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய செயற்பாடுகள் குறித்தும் விடுதலைப்புலிகள் மகளிர் பிரிவு தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

அத்துடன் தமிழீழத்தில் கிராம மட்டத்தில் இயங்கும் மாதர் சங்கங்கள், மற்றும் மகளிர் நலன்பேணும் அமைப்புக்கள் உட்பட பலவேறு பொது

[5 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவம் சதி செய்யுமென அரசாங்கம் அஞ்சுகின்றது

### வாசுதேவா நாணயக்கார குற்றச்சாட்டு

(மணிலா)

இலங்கையில் தரைப்படை, விமானப்படை, கடற்படை என முப்படைகளின் சட்டங்களை அரசு கடுமையாக்கு வகையில் அரசியல் சட்டத் திருத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது இராணுவம் அரசிற்கெதிராக கிளர்ந்தெழக்கூடாது, அரசைக் கைப்பற்றக் கூடாது என்ற அரசின் அச்சத்தின் காரணத்தினால் தான் என நவசமசமாஜக்கட்சித் தலைவர் வாசுதேவநாணயக்கார தெரிவித்துள்ளார்.

இத்தகைய அரசியல் சட்டத் திருத்தங்கள் இராணுவம் அரசிற்கு எதிராகத் திரும்பவே உதவும் என்றும், இராணுவத்தில் இருந்து தப்பிச்செல்லும் இராணுவத்தினர் அரசிற்கெதிரான குழுக்களில் இணைந்துவிடக்கூடாது என அரசு அஞ்சுகிறது. இதனைத் தடுக்கவே புதிய சட்டங்களை இயற்றுகிறதென்றும் அவர் மேலும்

[5 ஆம் பக்கம் பார்க்க]


உளவாளிகள் !!!
அவதானமாக இருக்கவும்..!
உங்கள் நண்பரின் நண்பன்
உளவாளியாகவும் இருக்கலாம்!

**வரி விளம்பரம்**

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று(3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி. (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள்.) (சி 5918)

### பற் சிகிச்சை நிலையம்

சென்றல் கிளினிக் (எஸ்.பி. சாமி அன் கோ கட்டிட பின்புறம்) யாழ். பஸ் நிலையம் அருகில் மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். பா. நே: தினசரி 12 ந.ப - 2 பி.ப வரை (சி-4057)

### வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருள்களும், லேஸ் தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் கான்பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5924)

### தவறி விட்டது

லிங்கநாதன் அன் கோ பில் புத்தகங்கள் கே. கே. எஸ் றோட்டில் தவறிவிட்டது. தயவு செய்து சந்திரன், விவேகானந்த அச்சகத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4256)

நீக்கலஸ் பிரான்சிஸ் என்பவருடைய (இ) நிவாரண அட்டையும், வைத்திய பரிசோதனை அட்டையும் அடங்கிய பை ஒன்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [4255]

### சான்றிதழ் ஒப்படைக்கவும்

பட்டதாரிப் பயிலுனர் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்


# மட்டக்களப்பு மாவட்டத்தில் 33,000 வீடுகள் ராணுவத்தால் அழிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்கால வன்செயல்கள் மற்றும் போர் நிலைமைகளால் 33ஆயிரம் வீடுகள் சேதமடைந்திருப்பதாக மாவட்ட வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறிலங்கா தமிழீழப்போர் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை இழைக்கத் தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகளாலும் விமானங்களின் குண் வீச்சுகளாலும் எறிகணைத் தாக்குதல்களாலும் 33 ஆயிரம் வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் இவை பயன்படுத்தப்பட முடியாத நிலையில் சேதமடைந்திருப்பதாகவும் திரட்டப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

## உதைபந்தாட்ட போட்டி முடிவு

கடந்த ஞாயிறன்று மாலை 4. 00 மணிக்கு முடிவடைந்த, மீசாலை வடக்கு சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்திற்கும் எதிர் லவனிதா குடியிருப்பு நற்பணிமன்ற விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் நாவற்குழி லவனிதா குடியிருப்பு நற்பணிமன்ற விளையாட்டுக்கழகம் 1க்கு 2 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

இவ் உதைபந்தாட்டம் நாவற்குழி லவனிதா குடியிருப்பு விளையாட்டு மைதானத்தில் நடந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி

## பரீட்சை முடிவுகள் இன்னும் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பரீட்சை நடைபெற்று பல மாதங்களாகியும் இதுவரை முடிவுகள் வெளியிடப்படவில்லை எனவும் நிர்வாகத்தின் திறமையின்மையையே இது எடுத்துக்காட்டுவதாகவும் பாதிக்ப்பட்ட மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட வணிகவியல் இறுதியாண்டு மாணவன் ஒருவர் விளக்குகையில் கடந்த ஏப்ரல் 92ஆம் ஆண்டுக்கான இறுதி ஆண்டுப்பரீட்சை நடைபெற்றது. எம்முடன் தோற்றிய ஏனைய மாவட்ட மாணவர்களுக்கான பெறுபேறுகள் கடந்த கார்த்திகை மாதமே வெளிவந்து விட்டன. ஆனால் எமக்கு இன்றுவரை பெறுபேறு கிடைக்கவில்லை இதற்கு எமது கல்லூரி நிர்வாகத்தின் அசட்டையீனமே காரணம். ஏனெனில் இம் முடிவுகளை பெறுவதற்கான எந்த ஒரு நடவடிக்கையையும் நிர்வாகம் மேற்கொள்ளவில்லை.

இதே வேளை அடுத்த ஏப்பிரலில் ஆரம்பமாக இருக்கும் பரீட்கைக்கு தோற்றுவதா? இல்லையா? என மாணவர்கள் குழம்பிய நிலையில் உள்ளனர் என அவர் தெரிவித்தார்.


வண்ணார்பண்ணை - கலட்டி

எச்சாட்டி மஹாமாரியம்மன் தேவஸ்தானம்

துர்க்காதேவி உற்சவமூர்த்தி

பிரதிஸ்டா

**மஹாகும்பாபிஷேகம்**

காலம்: 11 - 02 - 93 வியாழன் (இன்று)

நேரம்: காலை 8 30 மணி

**காலை நிகழ்ச்சிகள்**

விசேட நிகழ்ச்சிகளாக

நாதஸ்வரம்: தேவஸ்தான வித்வான் தாவடி குகதாஸ் குழுவினர்,

நாதஸ்வர சக்கரவர்த்தி

கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினர்

பண் இசை நிகழ்ச்சி

இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் குழுவினர்

சொற்பொழிவு:

கம்பன்கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ்

பொருள்: ஆலய மகிமை

கௌரவம்: ஆலய அர்ச்சகர் கருணாநந்தகுமாரசர்மா அவர்கள் ஆலயத்தில் நித்தியநைமித்திய கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பை இன்றிலிருந்து உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் வைபவம் இடம்பெறும். அத்துடன் அவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு பதவிவழி கடமைக்காக அவருக்கு பதவி முத்திரையுடன் அமைந்த தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

**மாலை நிகழ்ச்சிகள்**

மாலை 4 மணிக்கு துர்க்காதேவிக்கு 1008 தேசிக்காய் விளக்கேற்றப்பட்டு 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று தேவி பூந்தண்டிகையில் காட்சிதருவாள் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் அதனைத் தொடர்ந்து 22 02-93 தொடக்கம் 15 நாட்கள் வரை துர்க்காதேவிக்கு சாந்திக மஹோற்சவம் நடை


## உதவிப் பணக் கொடுப்பனவு

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட புற்றுநோய் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான டிசம்பர் மாதத்திற்குரிய உதவிப் பணக் கொடுப்பனவுகள் தற்பொழுது வழங்கப்பட்டு வருவதாக வேலணை உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## பணப்புழக்கம் அதிகரிப்பு

யாழ். குடாநாட்டுமக்களின் பணத்திற்கான தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு மூன்று கோடிரூபா பணம் கொழும்பிலிருந்து, இலங்கைவங்கியின் இரண்டாம் கிளை முகாமையாளரால் இங்கு கொண்டுவரப்பட்டு இலங்கைவங்கியின் யாழ். குடாநாட்டு கிளைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாக வங்கி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இதன் மூலம் குடாநாட்டு மக்களின்பணத்தேவையை ஓரளவுக்கு பூர்த்தி செய்யப்படுவதாக தெரியவருகிறது


# மரண அறிவித்தல்

## கந்தையாபிள்ளை வள்ளிப்பிள்ளை

(காரைநகர்)

காரைநகர் சின்னாலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் வசித்தவருமான திருமதி க. வள்ளிப்பிள்ளை 10-02-93 புதன்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்ற கந்தையாபிள்ளை (முன்னாள் பிரபல வர்த்தகர் எட்டியாந்தோட்டை) அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் வள்ளியம்மை, தெய்வானைபபிள்ளை ஆகியோரின் மைத்துனியும், காலஞ் சென்ற தெய்வானை, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடராஜா முன்னாள் வர்த்தகர் எட்டியாந்தோட்டை) மார்க்கண்டு [ரஞ்சனாஸ் புடைவை மாளிகை யாழ்] பரஞ்சோதி [நியூ ராஜா ஸ்ரோர்ஸ் வவுனியா]. அன்னபூரணம், சிவமணி, பாலசுப்பிரமணியம் (ரஞ்சனாஸ் புடைவை மாளிகை, யாழ்.) சண்முகராசா (அலங்காரி புடைவை மாளிகை, யாழ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனபாக்கியம், உமாதேவி, நேசரத்தினம் பரமநாதன் [இளைப்பாறிய அரசாங்க லிகிதர்], கதிரவேலு [லலிதா புடைவை மாளிகை யாழ்]. விமலாதேவி அன்னபாக்கியம் ஆகியோரின் அன்பு மாமியும் ராஜமோகனா சிவரஞ்சித் (நோர்வே), ராஜமோகன் (லண்டன்), ராஜசூரியன் [இந்தியா], ராஜாம்பிகை [யாழ் பல்கலைக்கழகம்]. உருத்திரா, மகாதேவா, மனோரஞ்சனா [அவுஸ்ரேலியா], மனோகரன் [லண்டன்], சிவபாதசுந்தரம் சிவகௌரி [கட்டடத் திணைக்களம் வவுனியா], சிவதீசன் (லண்டன்), சிவதாஸ், சிவரஞ்சன், சிறீஸ்கந்தராஜா, சிறிரமணகுமார் (கவின்), சிறிதரன், பஞ்சனா, சுஜா, அனுஷா, சித்திரா, நிரஞ்சனா, ராஜகமோஜினி கலைமகள், வாசுகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சமரன் [நோர்வே], ஆரணி, குருபரன் [அவுஸ்ரேலியா] சஜீவன், சரண்யா (வவுனியா) ஆகியோரின் அன்புப் பீட்டியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11 02- 93 இன்று பிற்பகல் 1.00 மணிக்கு 29/3 தேவாலய வீதி, ஓட்டுமடம் இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

29/3 தேவாலய வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்

[ரஞ்சனாஸ் புடைவை மாளிகை] யாழ்ப்பாணம்

(4258)


## நினைவு கூருகின்றோம்...

**1993-2-11**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - இலுப்பையடிச் சேனைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

வாணன் (மன்குடாவெளி - மட்டு.)

பாலன் (இலுப்பையடிச்சேனை மட்டு.)

தமிழீழக் கடற்பரப்பில் (யாழ் - பாலைத்தீவுக்கும், இரணைதீவுக்குமிடையே சோளகம் என்ற இடத்தில்) சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் படகு மூழ்கடிக்கப்பட்டு கொல்லப்பட்ட 6 தமிழ்க் கடற்றொழிலாளர்கள்.

1987 ஆம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட

அருகில் மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். பா. நே; தின சனி 12 ந.ப - 2 பி ப வரை (சி-4057)

## வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருள்களும், லேஸ் தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் கான்மாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5924)

## தவறி விட்டது

லிங்கநாதன் அன்கோபில் புத்தகங்கள் கே. கே. எஸ் றோட்டில் தவறிவிட்டது. தயவு செய்து சந்திரன், விவேகானந்த அச்சகத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4256)

நீக்கலஸ் பிரான்சிஸ் என்பவருடைய (இ) நிவாரண அட்டையும், வைத்திய பரிசோதனை அட்டையும் அடங்கிய பை ஒன்றும். ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சமநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [4255]

## சான்றிதழ் ஒப்படைக்கவும்

பட்டதாரிப் பயிலுனர் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றியவர்களில் இதுவரை நியமனம் கிடைக்காதவர்களும், கொட்டகலைக்கு முன் சேவைப்பயிற்சிக்கு அழைப்பு வந்து போகாதவர்களும், அழைப்பு வராதவர்களும் இத்திணைக்களத்தில் தங்கள் பெயர்களைப் பதிந்துள்ளார்கள். இவ்வாறு தங்கள் பெயர்களைப் பதிவு செய்தோர்களில் அநேகமானோர் தங்கள் பட்டதாரிச் சான்றிதழ் பிரதிகளையும், பரீட்சைக்குத் தோற்றிய கடிதம் முதலிய விபரங்களையும் இதுவரை இத்திணைக்களத்தில் ஒப்படைக்கவில்லை. இவ்விபரங்களை இதுவரை சமர்ப்பிக்காதவர்கள் (இன்று) இக்காரியாலயத்தில் நேரடியாக சமர்ப்பிக்குமாறு வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் 19 வயதுக்குட்பட்ட வருடாந்த கிரிக்கெட் போட்டி நாளை வெள்ளிக்கிழமையும், நாளை மறுநாள் சனிக்கிழமையும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (42)

இவ் உதைபந்தாட்டம் நாவற்குழி வனிதா குடியிருப்பு விளையாட்டு மைதானத்தில் நடந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட வணிகவியல் இறுதியாண்டு மாணவன் ஒருவர் விளக்குகையில் கடந்த ஏப்ரல் 92ஆம் ஆண்டுக்கான இறுதி ஆண்டுப்பரீட்சை

வண்ணார்பண்ணை - கலட்டி

எச்சாட்டி மஹாமாரியம்மன் தேவஸ்தானம்

### துர்க்காதேவி உற்சவமூர்த்தி பிரதிஸ்டா

## மஹாகும்பாபிஷேகம்

காலம்: 11 - 02 - 93 வியாழன் (இன்று)
நேரம்: காலை 8 30 மணி

### காலை நிகழ்ச்சிகள்

விசேட நிகழ்ச்சிகளாக

நாதஸ்வரம்: தேவஸ்தான வித்வான் தாவடி. குகதாஸ் குழுவினர்,
நாதஸ்வர சக்கரவர்த்தி
கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினர்
பண் இசை நிகழ்ச்சி
இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் குழுவினர்
சொற்பொழிவு;
கம்பன்கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ்
பொருள்; ஆலய மகிமை

கௌரவம்: ஆலய அர்ச்சகர் கருணாநந்தகுமாரசர்மா அவர்கள் ஆலயத்தில் நித்தியநைமித்திய கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பை இன்றிலிருந்து உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளும் வைபவம் இடம்பெறும். அத்துடன் அவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு பதவிவழி கடமைக்காக அவருக்கு பதவி முத்திரையுடன் அமைந்த தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

### மாலை நிகழ்ச்சிகள்

மாலை 4 மணிக்கு துர்க்காதேவிக்கு 1008 தேசிக்காய் விளக்கேற்றப்பட்டு 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று தேவி பூந்தண்டிகையில் காட்சிதருவாள் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் அதனைத் தொடர்ந்து 22 02-93 தொடக்கம் 15 நாட்கள் வரை துர்க்காதேவிக்கு சாந்திக மஹோற்சவம் நடைபெறும்.

நாதஸ்வரம்:
நாதஸ்வர மேதை
பஞ்சாபிகேசன் குழுவினர்

கம்பராமாயண
தொடர் விரிவுரை
நிகழ்த்துபவர்
கம்பவாரிதி

## இ. ஜெயராஜ்



காலம்: 11-2 93 முதல்
8 3-93 வரை

நேரம்:- 6 30 — 7.30

| | |
|---|---|
| 11-2 93 | அன்னவர்க்கே சரண் |
| 12-2-93 | அரசர்க்கு அரசன் |
| 13 2-93 | இராம அவதாரம் |
| 14 2 93 | விசுவாமித்திரர் |
| 15-2 93 | கை வண்ணம் கால் வண்ணம் |
| 16-2-93 | அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் |
| 17-2-93 | எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார் |
| 18 2-93 | பரசுராம கர்வ பங்கம் |
| 19 2-93 | வெழுத்தது ஓர் மயிர் |
| 20 2-93 | கொடுமனக்கூனி |
| 21-2-93 | ஏய வரங்கள் இரண்டும் கருக |
| 22-2-93 | போகின்றேன் விடையும் கொண்டேன் |

(4259)

—தேவஸ்தானம்

எந்த ஒரு நடவடிக்கையையும் நிர்வாகம் மேற்கொள்ளவில்லை.

இதே வேளை அடுத்த ஏப்ரலில் ஆரம்பமாக இருக்கும் பரீட்சைக்கு தோற்றுவதா? இல்லையா? என மாணவர்கள் குழம்பிய நிலையில் உள்ளனர் என அவர் தெரிவித்தார்.

## உதவிப் பணக் கொடுப்பனவு

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட புற்று நோய் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான டிசம்பர் மாதத்திற்குரிய உதவிப் பணக் கொடுப்பனவுகள் தற்பொழுது வழங்கப்பட்டு வருவதாக வேலணை உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## பணப்புழக்கம் அதிகரிப்பு

யாழ். குடாநாட்டுமக்களின் பணத்திற்கான தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு மூன்று கோடிருபா பணம் கொழும்பிலிருந்து, இலங்கைவங்கியின் இரண்டாம் நிலை முகாமையாளரால் இங்கு கொண்டுவரப்பட்டு இலங்கைவங்கியின் யாழ். குடாநாட்டு கிளைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாக வங்கி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

இதன் மூலம் குடாநாட்டு மக்களின்பணத்தேவையை ஓரளவுக்கு பூர்த்தி செய்யப்படுவதாக தெரியவருகிறது

## உதைப்பந்தாட்டம்

வலிவடக்கு பிரதேச சபை நலன்புரி அணிக்கும் மயிலிட்டி பிரதேசசபை நலன் புரி அணிக்கும் இடையே கடந்த வெள்ளியன்று நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் வலிவடக்கு பிரதேசசபை நலன்புரி அணி 2-0 என்ற கோல்களால் வெற்றி பெற்றது

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக பிரதேசசபை செயலாளர் திரு. டி. வி. எம் இராஜசிங்கம் கலந்து கொண்டார்.

## பொதுக் கூட்டம்

குருநகர் சென். ஜேம் இழுவை நால் மடிச் சங்கம், தண்ணீர்த்தாங்கி வீதி. குருநகர் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர் வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 3 30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. அ. திரவியம் தலைமையில் நடைபெறும்.

குருநகர் தண்ணீர்த்தாங்கி மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு சங்கத்தின் சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

...ழவம்]. உருத்திரா. மகாதேவா. மனோரஞ்சனா [அவுஸ்ரேலியா], மனோகரன் [லண்டன்], சிவபாதசுந்தரம் சிவஜெனி [கட்டடத் திணைக்களம் வவுனியா], சிவதீசன் (லண்டன்), சிவதாஸ், சிவரஞ்சன், சிறீஸ்கந்தராஜா, சிறிரமணகுமார் (சுவிஸ்), சிறிதரன், பஞ்சுனா. சுஜா, அனுஷா, சித்திரா. நிரஞ்சனா, ராஜகோபினி கலைமகள், வாசுகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சமரன் [நோர்வே], ஆரணி, குருபரன் [அவுஸ்ரேலியா] சஜீவன், சரண்யா (வவுனியா) ஆகியோரின் அன்புப் பீட்டியுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11 02- 93 இன்று பிற்பகல் 1.00 மணிக்கு 29/3 தேவாலய வீதி. ஓட்டுமடம் இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
29/3 தேவாலய வீதி, மக்கள்,
ஓட்டுமடம், மருமக்கள்
யாழ்ப்பாணம். [ரஞ்சனாஸ் புடைவை மாளிகை]
யாழ்ப்பாணம்

(4258)

## நினைவு கூருகின்றோம்...

### 1993-2-11

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - இலுப்பையடிச் சேனைப் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

வாணன் [பன்குடாவெளி - மட்டு.]

பாலன் [இலுப்பையடிச்சேனை மட்டு.]

தமிழீழக் கடற்பரப்பில் (யாழ் - பாலைத்தீவுக்கும், இரணைதீவுக்குமிடையே சோளகம் என்ற இடத்தில்) சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் படகு மூழ்கடிக்கப்பட்டு கொல்லப்பட்ட 6 தமிழ்க் கடற்றொழிலாளர்கள்.

1987 ஆம் ஆண்டு யாழ் - கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

வெள்ளைக்குரு [எமிலியான் மெண்டிஸ் நெல்சன் றெஜினோல்ட் - செம்பியன்பற்று வடக்கு - யாழ்.]

லிங்கம் அம்முனி [பரமசாமி அமிர்தலிங்கம் - கந்தரோடை, சுன்னாகம்-யாழ்]

1989 ஆம் ஆண்டு மட்டு - கோப்பாவெளிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். அசோக் [முத்துலிங்கம் மரியதாஸ் - பெரியபுல்லுமலை-மட்டு.]

1991 ஆம் ஆண்டு அம்பாறை - அக்கரைப்பற்று பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

கலா [அக்கரைப்பற்று - அம்பாறை]

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1992 ஆம் ஆண்டு திருமலை - மூதூர் 64-ம் கட்டையிலிருந்து பெரியபாலம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட கனித்தீவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

[இ/5976]

யாழ்ப்பாணம்

# தமிழ் மக்களின் சுயகௌரவத்தைக் காப்பாற்றியது ஆயுதப்போராட்டமே

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் [சீனசார்பு] ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரும், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான திரு நா. சண்முகதாஸன் கடந்த திங்களன்று தமது 74 வயதில் லண்டனில் மாரடைப்பால் இயற்கை எய்தினார். அவரை நினைவுகூருமுகமாக திரு. ச. தியாகராசாவினால் எழுதப்பட்ட இவ் ஆக்கம் பிரசுரமாகிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சீன சார்பு பிரிவு) ஸ்தாபகத்தலைவரும், இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான சண்முகதாசன் லண்டனில் கடந்த திங்களன்று மாரடைப்பால் காலமானார்.

தனது இருபத்து மூன்றாவது வயதில் பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்திசெய்த பின்னர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர அங்கத்தவராக இணைந்து கொண்ட அவர் அன்று முதல் நோய்வாய்ப்பட்டு காலமாகும் வரை தனது பணியில் சலிப்பின்றி உழைத்து வந்தவர் அவர்.

இலங்கை முழுவதும் தழுவிய வர்க்கப் புரட்சி ஒன்றை ஏற்படுத்துவதில் இவர் நம்பிக்கை கொண்டிருந்த போதும், தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்கான போராட்டங்களிலும் வடபகுதியில் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களிலும் முன்னின்று உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது அத்துடன் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான தமிழ் மக்களின் ஆயுதந் தாங்கிய போராட்டத்தை ஆதரித்து எழுதியும், பேசியும், செயற்பட்டும் வந்தவர் என்பது சிறப்பாகக் குறிப்பிடக்கூடியதாகும். குறிப்பாக இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பிரசன்னத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் நடத்திய போராட்டத்தை பெரிதும் மதித்துப் போற்றிய இவரது மரணம் துயரத்தைத் தருவதேயாகும்.

திரு நா. சண்முகதாசன் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை முன்மொழிந்தவர்களில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒருவர் என்பதும், வடபகுதியில் கோரத் தாண்டவமாடிய தீண்டாமைக்கு எதிராக முனைப்பான போராட்டத்தை வழி நடத்தியவர்களில் ஒருவர் என்பதும் இங்குசுட்டிக் காட்டப்படத்தக்கதே.

அரசியலில் பாராளுமன்றத்தை கள்வர்கள் குகை என்றே வர்ணித்த திரு. நா. சண்முகதாஸன் பெருந்தோட்ட தொழிலாளர் மத்தியில் ஒழுங்கமைத்த புதிய செங்கொடிச் சங்கத்தின் கீழ் தொழிலாளர்களை அரச இயந்திரத்திற்கு எதிராக கிளர்ந்தெழ வைப்பதில் பெரும் பங்காற்றினார். இவ்வகையில் ஹட்டனின் மேபீல்ட் தோட்டம், தலவாக்கலையின் வட்டகொடத் தோட்டம், பதுளையின் கினாகெலத் தோட்டம் என்பவற்றில் தொழிலாளருக்கு எதிராகத் தோட்ட நிர்வாகங்களால் ஏவப்பட்ட பொலிசாரை எதிர்த்து அத்தொழிலாளர்கள் திரமுடன் செயற்படுவதற்குச் சண்முகதாஸன் உந்து சக்தியாக விளங்கினார்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையில் சிங்களப் பேரினவாதக் கோட்பாட்டிற்கு எதிரான நிலைப்பாட்டையே எப்பொழுதும் வலியுறுத்திய சண்முகதாஸன், ஆயுதம் தாங்கிய போராட்டமாகப் பரிணாமம் பெற்றதையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றவர் ஆவார்.

"பிற்போக்குவாத இனவாத சிங்கள அரசுக்கு எதிராக ஆயுதம்தாங்கிப் போராடுவதற்கான தீர்மானத்தைத் தமிழ் இளைஞர்கள் மேற்கொண்டது மிகச் சரியானதே. இதன் மூலமாகத் தமிழ் மக்களின் சுயகௌரவத்தை அவர்கள் காப்பாற்றியதும் அல்லாமல், சர்வதேச ரீதியாகவே கெரில்லாப் போராட்ட வரலாற்றில் ஒரு புகழ் வாய்ந்த அத்தியாயத்தையும் எழுதியுள்ளார்கள்."

இவ்வாறு "பொதுவுடமை வாதி எனக் கூறிக் கொள்வதாக மனம்வருந்தாத ஓர் அரசியல்வாதியின் வாழ்க்கைக் குறிப்பு" என்னும் தனது நூலில் திரு சண்முகதாஸன் குறிப்பிட்டிருக்கின்றார். அத்துடன் தம்மை விடவும் பல மடங்கு வளர்ச்சி பெற்ற எதிரியை எதிர்க்க முற்பட்டது அவர்களின் உறுதியையும், வீரத்தையும் எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது என்றும் அவர் அந்நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்திய இராணுவம் இந்த மண்ணிலிருந்து விரட்டப்பட வேண்டுமென்பதிலும் அக்கறை காட்டிய சண்முகதாசன் அவர்கள் தமது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இந்தியப் படையினர் இலங்கையில் இருக்க வேண்டுமென்பதையே ஈ. பி. ஆர். எல். எவ்வினர் விரும்புகின்றனர். இந்திய இராணுவம் வெளியேறிவிட்டால் சிங்களவர்களிடம் இருந்து தமிழ் மக்களைப்பாதுகாப்பது யார் என்று அவர்கள் இதற்காக கேள்வி எழுப்புகின்றனர் ஆனால் இதற்கானபதில் சுலபமானது. இந்திய இராணுவம் இலங்கைக்கு வரும் முன்பு தமிழ் மக்களை யார் காப்பாற்றினார்கள்? இளைஞர்கள் ஓரணியில் நின்று மக்களையும் ஆயுதபாணிகளாக்கி யுத்தத்தைதொடர்ந்து நடத்தினால் தமிழர்களைப்பாதுகாப்பதற்கு இந்தியப்படை தேவையற்றது என்றார். சண்முகதாஸன் மறைந்து போய்விட்டாலும் அவரதுவாழ்க்கை அனுபவமும் அவரதுபட்டறிவின்போதனைகளும் வருங்கால தலைமுறைக்கு பாடமாக அமையும என அறுதியிட்டுக் கூறமுடியும்.

## யாழ். உணவுக்களஞ்சியமாக மறவன்புலவு திகழ்கிறது

### திட்டப்பணிப்பாளர் பத்மநாதன்

"யாழ். மாவட்டத்தின் உணவுக்களஞ்சியம் தென்மராட்சியிலுள்ள மறவன்புலவு கிராமம் என்று போற்றக்கூடிய அளவிற்கு நெல் மற்றும் சிறுதானிய உற்பத்திகளில் மறவன்புலவு கிராமம் முதன்மை வகிக்கின்றது." இவ்வாறு யாழ். செயலக புனர்வாழ்வு திட்டப் பணிப்பாளர் திரு. பதிமநாதன் தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக்குழுவின் ஏற்பாட்டில் மறவன்புலவு கிராமத்தில் உற்பத்திக் குழுத் தலைவர் திரு. செ. திருஞானசம்பந்தர் தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை (7 2 93) நடைபெற்ற அறுவடைவிழாவில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

விவசாய உதவிப்பணிப்பாளர் திரு. க. குணரத்தினம், இறுவர் பாதுகாப்பு நிறுவன யாழ். பொறுப்பாளர் திரு. ஜோன் குட்காஸ்ட், தென்மராட்சி உ. அ. அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை, செயர் நிறுவன வடபிராந்தியப் பணிப்பாளர் திரு ச. கிருஷ்ணபிள்ளை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் உட்படபல அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் இரு வயல்களில் விழாவில் கலந்துகொண்ட அரச அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளால் நெல் அறுவடை செய்யப்பட்டது.

## மாணவர் தலைமைப் பயிற்சிக்கு திணைக்களம் நிதி ஒதுக்கீடு

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இயங்கி வரும் பாடசாலைகளிலுள்ள மாணவர் தலைவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக ரூபா 2 இலட்சத்து 65ஆயிரம் (265,000.00) நிதி கோட்டரீதியாக வடக்கு கிழக்கு கல்வி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

இப்பயிற்சி நெறியானது ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 13 வரையுள்ள மாணவர் தலைவர், தலைவியர்களுக்கு அவர்களுடைய ஆளுமை விருத்தி, தலைமைத்துவப் பண்பு விருத்தி ஒழுக்கப் பண்பாட்டு விருத்தி ஆகியவற்றில் விசேட பயிற்சியை வழங்கும் திட்டமாகும்

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சாவகச்சேரி கோட்டத்துக்கு ரூபா 9,699/-ம், யாழ்ப்பாணக் கோட்டத்துக்கு ரூபா 18815/-ம், மருதனாமடம் கோட்டத்துக்குரூபா 19451/ம், பண்டத்தரிப்புக் கோட்டத்துக்கு ரூபா 14495.50ம், வடமராட்சிக் கோட்டத்துக்கு ரூபா 14469/-ம், வேலணைக் கோட்டத்துக்கு ரூபா 3498/-ம் இச்செயற்றிட்டத்துக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது (17)

## திருட்டு முறியடிப்பு

(வடமராட்சி)

நெல்லியடி வர்த்தக நிலையம் ஒன்றில் அண்மையில் நடைபெற்ற இரவுநேர திருட்டு முயற்சி ஒன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால் முறியடிக்கப்பட்டது.

வர்த்தக நிலையத்தின் கூரைப் பகுதியைப் பிரித்து கொள்ளையிட முயன்ற திருடர்களை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிடிக்க முயன்றபோதிலும் திருடர்கள் ஒருவாறு தப்பித்துக் கொண்டனர். [யோ]

## வடமராட்சியில் வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்க உத்தேசம்

(வடமராட்சி)

வடமராட்சியில் கரவெட்டி பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் 15 இலட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் நிவாரண வீடமைப்புத் திட்டமும், கடன் நன்கொடையுமான வீடமைப்புத் திட்டமும ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பிரிவுகளில் உள்ள குடும்பங்களின் புள்ளி விபரங்களை எடுப்பதற்கு பொது அமைப்புக்களில் உள்ள பிரதிநிதிகளின் நடுவர் குழு ஒன்று அமைத்து இப்புள்ளி விபரங்களை சேகரிக்க ஒத்துழைக்குமாறு கரவெட்டி, பருத்தித்துறை பிரிவு உதவி வேலைப் பரிசோதகர் திரு சோ கணநாதன் மற்றும் மருதங்கேணி வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகரப்பிரிவு உதவி வேலைப் பரிசோதகர் திரு. காசிலிங்கமும் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர். (யோ)

## பங்கீட்டு பொருள் விநியோகிக்க உத்தரவுபெற்ற வர்த்தகர் விருப்பம்

[யாழ்ப்பாணம்]

உத்தரவு பெற்ற தனியார் வியாபார நிலையங்கள் மூலம் பங்கீட்டு அட்டைகளுக்கு வழங்கி வந்த பொருள்கள் தற்போது அக்கடைகளுக்கு அருகில் இருக்கும் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டுவருகின்றது. இதுசம்பந்தமாக தனியார் வியாபாரிகள் செயலக புனர்வாழ்வுப்பகுதியினரிடம் மீண்டும் இவ் விநியோகத்துக்கான பொறுப்புகளை தங்களிடம் தரவேண்டும் என்று கேட்டுள்ளனர்.

தனியார் கடைகள் மூலம் பங்கீட்டுப் பொருள்களை பெற்று வந்தவர்கள் தாங்கள் பங்கீட்டுப் பொருள்களை பெறுவதில் ஏற்பட்டுள்ள சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு தனியார் கடை உரிமையாளருக்கும் புனர்வாழ்வுப் பகுதியினருக்கும் செய்த முறைப்பாட்டை அடுத்து செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் ப. நோ. கூ. சங்கத்தினரையும் உத்தரவு பெற்ற தனியார் கடை உரிமையாளர்களையும் அழைத்து இது சம்பந்தமாக நேற்று ஆராய்ந்ததாக தெரிய வருகிறது,

## கப்டன் கீர்த்தி ஐயா நினைவு நூலகம

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் நூல்நிலையத்திற்கு கப்டன் கீர்த்தி ஐயாவின் நினைவாக 08 02 93 அன்று "கப்டன் கீர்த்தி நூலகம்" என பெயர் சூட்டப்பட்டது.

இந்த வைபவத்திலே நீதி, நிர்வாகப் பொறுப்பாளர்திரு. பரா அவர்கள்கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கவிதைகள், நினைவு உரைகளும்இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது

## கட்டாய இராணுவப் பயிற்சி மாணவர்களுக்கு வேண்டுமாம்

(கொழும்பு)

"பாடசாலையில் கல்விபயிலும் 15 முதல் 20 வயதுக்கிடைப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் கட்டாய இராணுவபயிற்சி வழங்கப்பட வேண்டும்" இது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின்கருத்தாகும். இத்திட்டத்தை அரசாங்கம் பரிசிலித்து நடைமுறைப் படுத்தவேண்டும் இவ்வாறு நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் உரைநிகழ்த்திய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் எம். எச். எம். அஸ்ரப்கூறினார்.

## புத்தகாயாவில் புனித சின்னங்கள் களவாடப்படவில்லை

### - புதுடில்லியிலுள்ள தூதுவர் தெரிவிப்பு

[கொழும்பு]

இந்தியாவின் புத்தகாயாவில் பௌத்த மத புனிதச் சின்னங்கள் களவாடப்பட்டதாகக் கூறப்படுவதில் உண்மை இல்லை என்று புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் அறிவித்துள்ளார்.

அவர் மகாபோதி சங்கத் தலைவர் காமினி ஜயசூரியாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் களவு போனதாகக் கூறப்படும் பௌத்த சின்னங்கள் புத்தகாயாவில் பத்திரமாக இருப்பதாக மேலும் கூறியுள்ளார்.

## விழிப்புலனற்றோருக்கு வழிகாட்டுவோம்

நற்சமூக நடுநிலையத்தினரால "விழிப்புலனற்றோருக்கு வழிகாட்டுவோம்" என்ற தலைப்பின்கீழ் தமிழ், ஆங்கிலம், கணக்கு, பிறையிலில் கற்பித்தல் உட்பட பயிற்சி பெற்ற பணியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவமும், கருத்தரங்கும், செய்முறைக் கண்காட்சியும் எதிர்வரும் ஞாயிறு காலை 9. 30க்கு நிலையத்தில் நடைபெறும்.

## தரமுயர்வு

சாவகச்சேரி இந்துக்கல்லூரி உட்பட எட்டுப் பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கிய வட்டத்தின் 26 வது ஆண்டு நிறைவு விழாவும். 1989, 1990ம் ஆண்டுகளின் சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 14ம் திகதி காலை 9 00 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்படும்

## இலக்கியப் போட்டி

எதிர்வரும் 1993-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டுவிடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்படும் இலக்கியப் போட்டிக்கான முடிவுத் திகதி 1993-02-10 என முன்னர் அறிவித்திருந்தோம். பெரும்பாலான மக்களின் வேண்டுகோளுக்கிணங்க முடிவுத் திகதி 1993 02-20 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

(சி/5977)

## அறிவித்தல்

இடம் பெயர்ந்த தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களுக்கு;

தங்களுக்கு இது வரையிலும் தொழில் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாதுவிடின் யாழ்ப்பாணம், இலக்கம் 499 காங்கேசன்துறை வீதியில் உள்ள வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாசத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ ப பொ கூ. ச. சமாசம்
யாழ்ப்பாணம்.

(சி/5978)

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (வ/து)

## மருதங்கேணி

அங்கத்தவர் கவனத்திற்கு

அன்புடையீர்;
உங்கள் பங்குப்பண பெறுமதி ரு. 100/ ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 05. 03 1993-ம் ஆண்டிற்கு முன்னர் பங்குப்பணத்தை செலுத்தாவிடில் ப. நோ. கூ. சங்கத்தின் அங்கத்துவத்தை இழந்து விடுவீர்கள்.

- தவற விடாதீர்கள்
- இன்றே விரையுங்கள்
- நன்றே செய்யுங்கள்


மேலும் விபரங்களுக்கு:
வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

"கூட்டுறவே நாட்டுயர்வு"
"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"

சி. பொன்னம்பலம் — தலைவர்
பொ ஸ்ரீராமச்சந்திரன் — செயலாளர்

(4257)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
1962. 02. 18

ஆண்டவன்அடியில்:
1991. 02. 04

திதி:
1993. 02. 11

**விநாயகமூர்த்தி கருணாகரன்**

எங்கள் அன்புச் செல்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

மனைவி, மகன், அப்பா, அம்மா,
சகோதரர்கள், அம்மம்மா, மாமா, மாமிமார்,
சித்தப்பாமார், சித்திமார், உறவினர், நண்பர்கள்.

மில் ஒழுங்கை,
மல்லாகம். [4242]

## அழுகிய நிலையில் இளைஞர் சடலம்

வண் -மேற்கு வைத்திய சாலைக்கு அருகாமையிலுள்ள வீடொன்றிலிருந்து அழுகிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சடலம் டச்சுவீதி, சித்தன்கேணியை சேர்ந்த நடராசா ஸ்ரீ விமலநாதன் என்பவருடையதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (20)

## வீடமைப்பு மானியம்

[மானிப்பாய்]

யாழ். மாநகர சபையும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து வழங்கும் வீடமைப்பு மானியத்தை கடந்த வருடம் 45 குடும்பத்தினர் பெற்றுக்கொண்டுள்ளனர். கடந்த 92ம் ஆண்டில் யாழ். உதவி அரசாங்க அதிபர் பரிவில் 31 பேருக்கும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 14 பேருக்கும் வீடமைப்பு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் 93 ஆம் ஆண்டுக்கான "வீடமைப்பு மானியம்" வழங்குவது சம்பந்தமான 'வீடமைப்பு சமூக அபிவிருத்தி குழுக் கூட்டம்' 5 2-93 அன்று நடைபெற்றது. மாநகர சபை ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்திச் சபை முகாமையாளரும், யாழ். உதவி அரசாங்க அதிபரும் கலந்து கொண்டுள்ளனர். இக் கூட்டத்தின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி கடந்த ஆண்டினை விட இவ்வாண்டில் இரட்டிப்பாக மானியம் வழங்குவது என முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. [07]

## நாடக-நாட்டுக்கூத்துப் போட்டிகள்

எதிர்வரும் பரிசுத்த வாரத்தை முன்னிட்டு யாழ். திருமறைக்கலாமன்றம் நாடக-நாட்டுக்கூத்துப் போட்டிகளை நடத்த முன்வந்துள்ளது.

பெரும் பணப் பரிசில்களைக் கொண்ட மேற்படி போட்டிகளின் விண்ணப்ப முடிவு திகதி 31-3-93 ஆகும்.

மேலதிக விபரங்களை அறிய 283 பிரதான வீதி, மன்ற செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது. (21)

## ஊழியர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபை ஊழியர்கள் இணைந்து 'யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் ஊழியர் சங்கம்' என்ற பெயரில ஊழியர் சங்கம் ஒன்றை கடந்த திங்கட்கிழமை யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர். இக்கூட்டம் பருத்தித்துறை நரசபை செயலாளர் திரு. கனகசபை சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. இவ் ஊழியர் சங்கம் யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி ஊழியர்களின் நலனைக் கருத்திற் கொண்டு செயற்படவுள்ளது.

இந்த ஊழியர் சங்கத்தின் தலைவராக பருத்தித்துறை நரசபை செயலாளர் திரு. கனகசபை சண்முகநாதனும், உபதலைவராக திரு. ஐ சிவலோகநாதனும், செயலாளராக திரு. லோ. இராசசிங்கமும் தெரிவானினர் - செயற்குழு உறுப்பினர்களாக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலுமிருந்து தலா 3 ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இ சங்கத்தின் முதலாவது கூட்டம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொக்குவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [25]

## போதனா வைத்தியசாலையில் பதவி வெற்றிடம் அதிகரிக்கலாம்?

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் ஊழியர் பற்றாக்குறை பெருமளவில் ஏற்படவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் இருந்த வெற்றிடங்கள் பலவும் சுகாதார சேவைகள் பிரிவினராலேயே நிரப்பப்பட்டிருந்ததாகவும், இப்போது சுகாதார சேவைகள் பிரிவு தமது ஊழியர்களைப் படிப்படியாக மீளப் பெற்று வருவதாகவும் அதையடுத்தே இந்த வெற்றிடங்கள் ஏற்பட இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை தற்போது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தென்மாகாணத்தில் ஜே.வி.பி மீண்டும் தலையெடுப்பாம்

மாத்தறை, எம்பிலிப்பிட்டிய, அம்பாந்தோட்டை பகுதிகளில் ஜே. வி. பி யினர் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கி யிருப்பதாகவும், வழிப்பறி, கொள்ளை வீடுடைப்பு சம்பவங்கள் அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இவற்றையடுத்து பொலிஸார் வேவு நடவடிக்கைகள், மற்றும் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இளங்கலைஞர் மன்றத்தின்

## இசை விழா

வடமாகாண தெ. பனம் பொருள் கூட்டுத்தாபனத்தின் ஆதரவில்

**மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்**

**11 - 2 - 93 இன்று**

மாலை 4 00 — 5 00 மங்கள இசை

| நாதஸ்வரம் : | தவில் |
|---|---|
| ஆர். சிவகுமார் | என். கணேசன் |
| கே. பவப்பிரியன் | எஸ், மோகனசுந்தரம் |
| கே, பஞ்சரத்தினம் | என். அம்பிகைபாலன் |
| | எஸ். சிவகுமார் |

5 00 — 5.15 வயலின் வீணையிசை

| | |
|---|---|
| ஜே. சிவசக்தி | ஜெயபாலின் |
| எஸ். சரோஜினி | றாகி |
| எஸ். வித்யாலட்சுமி | வித்தியா |
| ஜே சிவச்செல்வி | துளசி |

மிருதங்கம் : சதாவேல்மாறன்

5.15 — 5.45 பண்ணிசை
துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்
வயலின் : ஆர். எஸ். கேசவ மூர்த்தி
மிருதங்கம்: கே, கண்ணதாசன்

5 45 — 6 15 பாட்டு என். கருணாகரன்
வயலின் : எஸ். வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்: எஸ். பாலச்சந்திரசர்மா

6 15 — 7.00 பாட்டு யசோதா செல்வராஜா
வயலின் : பாக்கியலட்சுமி நடராஜா
மிருதங்கம்: எஸ். துரைராஜா

7 00 — 7 15 மங்கள விளக்கேற்றல்
திரு எஸ் வி. சிவகுருநாதன் வி. எம். எஸ்.
க சிவபாலன் (கே. கே, கே. வர்த்தகர்)
திரு. எஸ் மனோஹரன் (வர்த்தகர் கலேவல)

தலைவர் : இ சிவநேசன் (பொதுமுகாமையாளர் வடமாகாணம் தெ. ப. கூ.)

சிறப்பு விருந்தினர்: கலாநிதி க. கனகராஜா (அதிபர் மில்க்வைற்)
தி. நாகரட்ணம் [சாந்தி அச்சகம்]

7.15 — 8.15
கலாவினோதன் எஸ் கணபதிப்பிள்ளை
(சின்னமணி வழங்கும் வில்லிசை)
"சங்கீத பிதாமகர் புரந்தரதாஸர்"

8 15 — 9 30 பரதநாட்டியம்
திருமதி வசந்தி குஞ்சிதபாதம் அவர்களின்மாணவிகள்

வாழ்த்துவோர் :

**ரூபன் ஸ்ரோர்ஸ்**

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி

சி 5962

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

சேற்றிலே ஆனை புதைந்து விட்டால்
காகமும் போய் முட்டிப் பார்க்கும்

— தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 11 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 020 - 2449 நிர்வாகம் 2028

# தன்வினை தன்னைச் சுடும்

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும், ஆட்சியிலுள்ள செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க விற்கும் இடையிலான நட்புறவு நிலை முடிவிற்கு வந்துள்ளதாகத் தெரிகின்றது. கடந்த இரு தினங்களில் தமிழக சட்டசபையில் அ. தி. மு. க.விற்கும், காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் நடந்துவரும் மோதல்களும், சட்டசபை வெளிநடப்பும், வெளியேற்றப்பட்டமையும் அ. தி. மு.க அமைச்சர்களின் அறிவிப்புக்களும் இவற்றை வெளிப்படுத்துபவையாகவேயுள்ளன. இதன் தொடராகத் தமிழகத்தில் மீண்டும் புலிகள் விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. தற்பொழுது தமிழகத்தில் புலிகள் இருக்கின்றார்களோ இல்லையோ ஆனால் புலிகள்விவகாரம் பெரியளவில் எழுந்துள்ளது.

இந்தியாவின் அரசியல் சாசனம் இறுக்கமானதல்ல. ஒரு நெகிழும்தன்மைகொண்டது. அதிலும் மத்திய - மாநில அரசுகளுக்கிடையிலான உறவு விடயத்தில் மத்திய அரசு தனது விருப்பிற்குஏற்ப பயன்படுத்தக்கூடியது. இதன் அடிப்படையிலேயே கடந்தகாலத்தில் தான் விரும்பாத மாநில அரசுகளைக் கலைக்க மத்திய அரசால் முடிந்தது. கலைக்கப்படும் மாநில அரசுகள் எவ்வளவு மக்கள் பலம் பெற்றுள்ளது, அதன் பெரும்பான்மைப்பலம் எவ்வளவு என்பதுகூட கவனத்திற்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கவில்லை.

இந்நிலையில் தற்பொழுது காங்கிரஸ்கட்சிக்கும் அ. தி. மு. க அரசிற்குமிடையில் உருவாகியுள்ள மோதல் தமிழக அரசின் ஆட்சிக்காலத்தைக் கேள்விக்குரியதாக்கியுள்ளது என்றால் மிகையாகாது. அதாவது புலிகள்பற்றி புரளிகளைக் கிளப்பி ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா அரசாங்கம் இன்று புலிகள் பற்றி மற்றவர்கள் கிளப்பும் புரளிகளினால் பதவி இறங்கவேண்டிவருமோ என்ற அவல நிலை உருவாகியுள்ளது.

ஆனால், இதற்கான பொறுப்பை ஜெயலலிதா வேறு யாருடைய தலையிலும் சுமத்திவிட முடியாது. புலிகள் பற்றி பெரும் புரளிகளைத் தமிழகத்தில் உருவாக்கியவர்களில் ஜெயலலிதா முதன்மையானவர். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது ஒன்றையே நோக்காகக் கொண்டு செயற்பட்ட ஜெயலலிதா, புலிகள் விவகாரத்தை வைத்தே தி. மு. க. அரசைக் கலைக்க வற்புறுத்தியவர்,

# சகல ஆசிரியர்களுக்குமான ஆக்க ஓவியப் போட்டி

யாழ். கல்வித் திணைக்களத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆக்க ஓவியப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று கீழ் வரும் நிலையங்களில் காலை 9.00 மணி முதல் பி. ப. 1.00 மணி வரை நடைபெறும்.

வேலணை கோட்டம் யாழ். சென்ஜோன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம் கோட்டம் யாழ். இந்துக் கல்லூரி, சாவகச்சேரி கோட்டம் சாவகச்சேரி மகளிர் ம. வி., பருத்தித்துறை கோட்டம் வேலாயுதம் ம.வி., மருதனார்மடம் கோட்டம் இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு கோட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்படுவதுடன் அவற்றிற்குச் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. பங்குபற்ற விரும்புவோர் பொருத்தமான கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

## கலந்துரையாடல்

திலகக் கோட்டத்திற்குட்பட்ட கல்வி வளர்ச்சிக் கழக ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் தமிழ் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. இன்பன் அவர்களும் கலந்து கொள்ளவுள்ளார்.

# பத்திரிகைகள் மீது அழுத்தம் அரசு மீது கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் அரசை விமர்சிக்கும் சுதந்திரமான பத்திரிகைகளின் குரல்வளையை நசுக்கும் நடவடிக்கைகளில் அரசு இறங்கியிருப்பதாக இலங்கையின் எவ். என். எம். எனப்படும் பத்திரிகையாளர்களின் குழு இலங்கை அரசு மீது குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கையில் வெளிவரும் திவயின, உபாலி பத்திரிகை நிறுவனம் உள்ளிட்ட தனியார் பத்திரிகைகளுக்கு அரசு விளம்பரங்களைக் குறைத்து பொருளாதார அழுத்தங்களை ஏற்படுத்தி பல சிக்கல்களை உண்டாக்கி அவற்றை மூடும் நிலைக்குத் தள்ளுவதாக எவ். என். எம் குழு குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் அரச அதிகாரிகள் பலவிளம்பரதாரர்களை அணுகி அரசை விமர்சிக்கும் பத்திரிகைகளுக்கு விளம்பரம் அளிக்க வேண்டாம் எனக் கூறுவதாக இக்குழு கூறியுள்ளது.

# இந்தி எழுத்து அழிப்பு 1000 தி. க. வினர் கைது

தமிழ்நாட்டில் இந்திமொழி திணிக்கப்படுவதாகக் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் புகையிரத நிலையங்களில் உள்ள பெயர்ப்பலகைகளில் இந்தி எழுத்துக்கள் அழிக்க முயன்ற திராவிடக்கழகத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

சென்னையில் எழும்பூர் புகையிரத நிலையத்துக்கு தனது கட்சித் தலைமை அலுவலகத்திலிருந்து ஊர்வலமாகச் சென்றபோது இதன் பொதுச் செயலாளர் கி. வீரமணி உட்பட சுமார் 200 பேர் கைதானார்கள்.

கரை

விபரம் வருமாறு:

நாகராசா (புங்குடுதீவு) அமலன்(புங்குடுதீவு)தவராசா (இயக்கச்சி) மரியதாஸ் (வேலணை) ஞானசிங்கம் (பரந்தன்) அருளப்பு அடைக்கலம் (நவாலி). ஏனைய இருவரது விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

இராணுவம்

தெரிவித்தார்.

பிரதமர் டி. பி. விஜேதுங்க கூட்டுப்படைசட்டமூலம் தயாரிக்கப்பட்டது கொள்ளை, கொலை, துஷ்பிரயோகம், மக்களின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காகும் எனத் தெரிவித்தார்.

ஆனால் இராணுவத்தை விட்டோடி எதிர் அணிகளில் சேர்ந்துள்ளவர்கள் தொடர்பாகவே கூட்டுப்படை சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவாசுதேவா மேலும் தெரிவித்தார்.

சர்வதேச

அமைப்புக்களும் சர்வதேச மக

ஒப்பந்தம்

பாவனைக்காக திறந்துவிடுவது தொடர்பான பேச்சுக்களில் பங்குபற்றியுள்ள ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தின் நிலைப்பாட்டை நன்கு தெளிவு படுத்தும் வகையில் அதன் யாழ். வதிவிடச் செயலக அதிகாரி திரு. அசோக்குமார் கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

கேரதீவு- சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதுதொடர்பான அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தின் கருத்துக்கள் சிறிலங்கா அரசிடம் எடுத்துரைக்கப்பட்டன. சிறிலங்கா அரசு அதற்கு அளித்த பதில் விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்கப்பட்

# ஆயர் ஏரியை கடந்தாரா? விசாரணை நடக்கிறதாம்

(கொழும்பு)

''ஆங்கிலத் திருச்சபை ஆயர் கெனத் பர்னாண்டோ யாழ். கடல்நீரேரியைகடந்திருந்தால் அப்போது அவரை கைது செய்ய முடியாமற்போனது அதிர்ஷ்ட குறைவாகும்' என சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; 'போதிய நேரடி ஆதாரம் இல்லாத பட்சத்தில் ஆயர் கெனத்பர்னாண்டோ உண்மையிலேயே அவசரகால ஒழுங்கு விதிகளை மீறினார் என்பதை நீதிமன்றத்தில் நிரூபிப்பது முடியாதகாரியம் அவர் படகொன்றில் யாழ். ஏரியைக் கடந்து சென்றார் என்ற செய்தியிலுள்ள உண்மைகளை அறிந்துகொள்ள விசாரணைகள் நடத்தப்படுகின்றன' என்றார்.

அவர் மேலும் 'கிளாலி கடனேரி மார்க்கமாக போக்குவரத்துக்கு இன்னமும் திறக்கப்படவில்லை. பூநகரி-சங்குப்பிட்டி பாதையை திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது' என்று தெரிவித்தார்.

## மாற்றுண்டியலுக்கு மீண்டும் கமிஷன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ்.கிளைக்கு கொழும்பிலிருந்து மூன்று கோடி ரூபா பணம் எடுத்துவரப்பட்டதைத் தொடர்ந்து மாற்றுண்டியலுக்கான கமிஷன் அறவிடும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என தெரியவருகிறது. வங்கியில் பணப்புழக்கம் அதிகரித்துள்ளமையே இந்நடவடிக்கைக்குக் காரணம் என வங்கி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. அண்மைக் காலங்களில்வங்கியில் பணப்புழக்கம் குறைவடைந்திருந்த காலத்தில் இக்கமிஷன் அறவிடுவது நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற்பரப்பின்கிளிநொச்சிக் கரையோரமாக இளம்பெண் ஒருவரின் தேசிய அடையாள அட்டை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

அரியாலையைச் சேர்ந்த சசிகலா (வயது 28) என்பவரது அடையாள அட்டையே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது. இப் பெண்ணின் தொழில் தாதி என்று இவ் அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. சென்ற மாதம் நடுப்பகுதியிலேயே இது கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

(ஈ)

குமண கப்பலில்

# பாடசாலை தளபாடங்கள் 20 வீதம் மட்டுமே வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதித்த தளபாடங்களில் இருபது வீதமானவையே கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த பல மாதங்களாக யாழ். கல்விப்பணிப்பாளர் எடுத்த முயற்சியின் பயனாக 5000தளபாடங்களை அனுப்பி வைக்க கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியிருந்தது. இதைத் தொடர்ந்து கல்வித் திணைக்கள அதிகாரிகள் தளபாடங்களைகொழும்பு துறைமுகப் பண்டசாலைக்கு

யுனிசெவ்

இவ்வாறு பி. பி. சியின் மைய செய்தி ஆய்வாளர் கிறிஸ் மொறிஸ் எழுதியுள்ள கண்ணோட்டத்தில் தெரிவித்தார்

அவர் மேலும் 'எந்த போரும் எந்த சண்டையும் நாகரிகமானது அல்ல வட

வெளிநடப்பும், வெளியேற்றப்பட்டமையும் அ. தி. மு. க அமைச்சர்களின் அறிவிப்புக்களும் இவற்றை வெளிப்படுத்துபவையாகவேயுள்ளன. இதன்தொடராகத் தமிழகத்தில் மீண்டும் புலிகள் விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. தற்பொழுது தமிழகத்தில் புலிகள் இருக்கின்றார்களோ இல்லையோ ஆனால் புலிகள்விவகாரம் பெரியளவில் எழுந்துள்ளது.

இந்தியாவின் அரசியல் சாசனம் இறுக்கமானதல்ல. ஒரு நெகிழும்தன்மைகொண்டது. அதிலும் மத்திய - மாநில அரசுகளுக்கிடையிலான உறவு விடயத்தில் மத்திய அரசு தனது விருப்பிற்குஏற்ப பயன்படுத்தக்கூடியது. இதன் அடிப்படையிலேயே கடந்த காலத்தில் தான் விரும்பாத மாநில அரசுகளைக் கலைக்க மத்திய அரசால் முடிந்தது. கலைக்கப்படும் மாநில அரசுகள் எவ்வளவு மக்கள் பலம் பெற்றுள்ளது, அதன் பெரும்பான்மைப்பலம் எவ்வளவு என்பதுகூட கவனத்திற்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கவில்லை.

இந்நிலையில் தற்பொழுது காங்கிரஸ்கட்சிக்கும் அ: தி. மு. க அரசிற்குமிடையில் உருவாகியுள்ள மோதல் தமிழக அரசின் ஆட்சிக்காலத்தைக் கேள்விக்குரியதாக்கியுள்ளது என்றால் மிகையாகாது. அதாவது புலிகள்பற்றி புரளிகளைக் கிளப்பி ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா அரசாங்கம் இன்று புலிகள் பற்றி மற்றவர்கள் கிளப்பும் புரளிகளினால் பதவி இறங்கவேண்டிவருமோ என்ற அவல நிலை உருவாகியுள்ளது.

ஆனால், இதற்கான பொறுப்பை ஜெயலலிதா வேறு யாருடைய தலையிலும் சுமத்திவிட முடியாது. புலிகள் பற்றி பெரும் புரளிகளைத் தமிழகத்தில் உருவாக்கியவர்களில் ஜெயலலிதா முதன்மையானவர். ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது ஒன்றையே நோக்காகக் கொண்டு செயற்பட்ட ஜெயலலிதா, புலிகள் விவகாரத்தை வைத்தே தி. மு. க. அரசைக் கலைக்க வற்புறுத்தியவர்,

இதன் மூலம், தி. மு. க. அரசைக் கலைப்பதற்கு மத்திய அரசிற்கு வழி காட்டிக் கொடுத்தவர். தற்போது அதே வழியில், காங்கிரஸ் கட்சி இறங்கியுள்ளபோது அவ் வழியை தவறு என்று ஜெயலலிதாவால் எவ்வாறு கூறிவிட முடியும்? அதாவது மத்திய அரசு மீது குற்றம் சாட்ட ஜெயலலிதாவிற்கு என்ன தார்மீக உரிமையுண்டு?

இதேவேளை தமிழக சட்டசபையில் காங்கிரஸாரின் கூச்சலும் கூக்குரலும் அர்த்தமற்றது. ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்ட போது எதுவித விசாரணையும் இன்றி விடுதலைப் புலிகளே கொலை செய்தார்கள் என்றமுடிவிற்குவந்த காங்கிரஸ்காரர்கள் விழுப்புரத்தில் காந்தி சிலைக்குக் குண்டுவைத்தவர்கள் விடுதலைப்புலிகளல்ல என ஜெயலலிதா கூறும்போது விசாரணை முடியாமல் எவ்வாறு கூற முடியும்? எனக் கேள்வி எழுப்பிவருகின்றனர். இது அவர்களின் அயோக்கியத்தனத்தையே காட்டுவதாகும்.

ஆனால், எது எப்படி இருப்பினும் காங்கிரஸ் - அ. தி. மு. க. உறவில் ஏற்பட்ட விரிசல் ஜெயலலிதா அரசிற்கு அச்சம் ஊட்டும் ஒன்று என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை. இதேவேளை, இதையிட்டு ஜெயலலிதா ஆத்திரமடைவதோ, அன்றி கவலைப்படுவதற்கோ நியாயம் எதுவுமில்லை. தன்வினை தன்னைச்சுடும் என்ற முதுமொழியை நினைவிற் கொள்ளுதலே பொருத்தமானது.

---

வுள்ளார்.

களின் குழு இலங்கை அரசு மீது குற்றம் சாட்டியுள்ளது.

நிலைக்குத் தள்ளுவதாக எவ். என். எம் குழு குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் அரச அதிகாரிகள் பலவிளம்பரதாரர்களை அணுகி அரசை விமர்சிக்கும் பத்திரிகைகளுக்கு விளம்பரம் அளிக்க வேண்டாம் எனக் கூறுவதாக இக்குழு கூறியுள்ளது.

[illegible]ளமையே இந்நடவடிக்கைக்குக் காரணம் என வங்கி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. அண்மைக் காலங்களில்வங்கியில் பணப்புழக்கம் குறைவடைந்திருந்த காலத்தில் இக்கமிஷன் அறவிடுவது நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தி எழுத்து அழிப்பு 1000 தி. க. வினர் கைது

தமிழ்நாட்டில் இந்திமொழி திணிக்கப்படுவதாகக் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் புகையிரத நிலையங்களில் உள்ள பெயர்ப்பலகைகளில் இந்தி எழுத்துக்கள் அழிக்க முயன்ற திராவிடக்கழகத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

சென்னையில் எழும்பூர் புகையிரத நிலையத்துக்கு தனது கட்சித் தலைமை அலுவலகத்திலிருந்து ஊர்வலமாகச் சென்றபோது இதன் பொதுச் செயலாளர் கி. வீரமணி உட்பட சுமார் 200 பேர் கைதானார்கள்.

---

கரை

விபரங்கள் வருமாறு:

நாகராசா (புங்குடுதீவு) அமலன்(புங்குடுதீவு)தவராசா (இயக்கச்சி) மரியதாஸ் (வேலணை) ஞானசிங்கம் (பரந்தன்) அருணப்பு அடைக்கலம் (நவாலி). ஏனைய இருவரது விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

---

இராணுவம்

தெரிவித்தார்.

பிரதமர் டி. பி. விஜேதுங்க கட்டுப்பாடைச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டது கொள்ளை, கொலை, துஷ்பிரயோகம், மக்களின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காகும் எனத் தெரிவித்தார்.

ஆனால் இராணுவத்தை விட்டோடி எதிர் அணிகளில் சேர்ந்துள்ளவர்கள் தொடர்பாகவே கூட்டுப்படை சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என வாசுதேவா மேலும் தெரிவித்தார்.

---

சர்வதேச

அமைப்புக்களும் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பல்வேறு ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஆங்காங்கு இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

விடுதலைப்புலிகள் மகளிர் பிரிவு தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் கிராமிய மட்டத்தில் வாழும் மகளிரை விழிப்படையச் செய்யும் முகமாக எழுச்சிக் கருத்தரங்குகளையும் மகளிர்தின ஏற்பாட்டுக் கூட்டங்களையும் நடாத்தி வருகிறது. இவ்வாறான கருத்தரங்குகள் பாடசாலை மாணவர்கள் மட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது.

இவற்றைவிட தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளில்குறிப்பாக வடபகுதியில் உள்ள பிரதான வீதிகளுக்குகுறுக்காகசர்வதேச மகளிர் தினத்தைப் பறைசாற்றும் பதாகைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் மகளிரை எழுச்சியடையச் செய்யும் எழுச்சிக் கோஷங்கள் மற்றும் கருத்துப்படங்கள் அடங்கிய காட்சிப்பலகைகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. (ஈ)

---

ஒப்பந்தம்

பாவனைக்காக திறந்துவிடுவது தொடர்பான பேச்சுக்களில் பங்குபற்றியுள்ள ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தின் நிலைப்பாட்டை நன்கு தெளிவு படுத்தும் வகையில் அதன் யாழ். வதிவிடச் செயலக அதிகாரி திரு. அசோக்குமார் கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

கேரதீவு- சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதுதொடர்பான அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தின் கருத்துக்கள் சிறிலங்கா அரசிடம் எடுத்துரைக்கப்பட்டன. சிறிலங்கா அரசு அதற்கு அளித்த பதில் விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்கப்பட்டது. இந்த வகையில் இருதரப்பினரும் தெரிவித்த கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் இருவர் சிறிலங்கா அரசு அதிகாரிகள் ஆராய்ந்து தெரிவித்த கருத்துக்களை விடுதலைப் புலிகளிடம் எடுத்து விளக்குவதற்காக இவ்வார இறுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இவ்இரு அதிகாரிகளின் வருகையை வைத்துக்கொண்டு யாரும் எந்த முடிவையும் இப்போது எடுக்க முடியாது.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை திறக்கப்படுமா உணவுப் பொருள்கள் வருமா என்பது பற்றியாரும் இப்பொழுது கருத்துக் கூற முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசு ஆகிய இருதரப்பினருடனும் கலந்து பேசி இரு தரப்பிலும் சுமுகமான, இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்த முடியுமா என்பதைப் பற்றியும் தற்போது தமது தரப்பில் ஆராயப்பட்டு வருகிறது. இதில் யு. என். எச். சி ஆர். மூன்றாம் தரப்பினரே.

---

# அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற்பரப்பின்கிளிநொச்சிக் கரையோரமாக இளம்பெண் ஒருவரின் தேசிய அடையாள அட்டை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

அரியாலையைச் சேர்ந்த சசிகலா (வயது 28) என்பவரது அடையாள அட்டையே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது. இப் பெண்ணின் தொழில் தாதி என்று இவ் அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது கடந்த மாதம் நடுப்பகுதியிலேயே இது கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஈ)

---

குமண கப்பலில்

# பாடசாலை தளபாடங்கள் 20 வீதம் மட்டுமே வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதித்த தளபாடங்களில் இருபது வீதமானவையே கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த பல மாதங்களாக யாழ். கல்விப்பணிப்பாளர் எடுத்த முயற்சியின் பலனாக 5000 தளபாடங்களை அனுப்பி வைக்க கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியிருந்தது. இதைத் தொடர்ந்து கல்வித் திணைக்கள அதிகாரிகள் தளபாடங்களைகொழும்பு துறைமுகப் பண்டசாலைக்கு அவற்றை எடுத்துச் சென்று ஒப்படைத்திருந்தனர். ஆனால் அண்மையில் பருத்தித்துறைக்கு உணவுப் பொருள்களை எடுத்து வந்த குமண கப்பலில் 1000 தளபாடங்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்கான காரணங்கள் எதுவும் இதுவரை தெரியவில்லை,

---

யுனிசெவ்

இவ்வாறு பி. பி. ஸியின் மைய செய்தி ஆய்வாளர் கிறிஸ் மொறிஸ் எழுதியுள்ள கண்ணோட்டத்தில் தெரிவித்தார்

அவர் மேலும் "எந்த போரும் எந்த சண்டையும் நாகரிகமானது அல்ல வட பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் 1990 முதல் மின்சாரமில்லை, மருந்து எரிபொருள் இல்லை. இங்கு அனுப்பப்படும் உணவு உயிர் வாழ மட்டுமேபோதுமானது.

"இழக்கில் ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்து சொத்திழந்து தொழிலிழந்து தவிக்கிறார்கள். முழு அளவு நிவாரணம் அவர்களுக்கு கிடைப்பதில்லை. மக்களின் ஆரோக்கியம் குன்றிவருகிறது கடந்த டிசம்பர் வெள்ளம் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது".

குழந்தைகளின் உடல்போக்கிலும்உளப்போக்கிலும் நீண்டகாலநோக்கில ஏற்படப்போகும் பாதிப்புகள் பற்றி மருத்துவர்கள் கவலைப்படுகிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்தப் போரில் உணவு ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முறையில் அரசு வெற்றி பெற முடியாது. விடுதலைப் புலிகள் வடபகுதியில் உணவைப் பொறுத்த வரை தன்னிறைவு அடையச் செய்ய முயன்றுவருகிறார்கள்" என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# மறியல் போராட்டம் நிறுத்தம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகம் முன் பல கோரிக்கைகளை முன் வைத்து நடாத்தப் பட்டு வந்த மறியல் போராட்டம் இரண்டு தினங்களுடன் முடிவடைந்தன.

கடந்த திங்கட்கிழமை மீனவர் ஒன்றிய சங்கங்களும், மறுநாள் பருத்தித்துறை வர்த்தக சங்கமும் மறியல் போராட்டத்தைநடாத்தியது.

நேற்று மறியல் போராட்டம் நிறுத்தப்பட்டு அலுவலகம் மீண்டும் செயற்பட்டது.

(யோ)

# அ. தி. மு. க. - காங்கிரஸ் உறவு முறிவடைந்தது

## ஆறு தமிழக அமைச்சர்கள் அறிவிப்பு

(சென்னை)

தமிழக மக்களின் உணர்வுக்கு விரோதமாக இந்திரா காங்கிரஸ் கட்சி செயற்படுவதாகவும் ஆகவே அக்கட்சியுடன் அனைத்து இந்திய அண்ணா தி. மு. கழகம் இனிக் கூட்டணி வைத்துக் கொள்ளாது என்றும் ஆறு தமிழக அமைச்சர்கள் நேற்றுத் தெரிவித்திருக்கிறார்கள்.

மாநில சட்டப் பேரவையில் இவ்விரு கட்சி உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட கடும் மோதலுக்குப் பிறகு அமைச்சர்கள் எஸ். டி. சோமசுந்தரம், முத்துசாமி, செங்கோட்டையன், கண்ணப்பர், அழகு திருநாவுக்கரசு, செல்வகணபதி ஆகியோர் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்து இந்தத் திணிப்பைக் கண்டிக்காமல் அதை ஆதரிக்கும் வகையில் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் சட்டப் பேரவையில் நடந்து கொண்டதாகக் குறை கூறி அக் கட்சியுடன் இனி உறவு இடையாது என்று குறிப்பிட்டனர்.

இந்த ஆறு அமைச்சர்களும் கட்சியின் பொறுப்புகளிலும் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டப் பேரவைத் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், கூட்டணி சம்பந்தமாக முடிவெடுக்கும் நிலையில் இருப்பவர்கள் இது பற்றிக் கருத்துக் கூறட்டும் என்று கூறினார்.

இதற்கிடையில் நேற்றுக் காலை திருச்சியில் செய்தியாளரிடம் பேசிய தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, தமிழக சட்டப் பேரவையில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்தாலும் இரண்டு கட்சிகளுக்கிடையிலேயான உறவு தொடரும் என்றார்.

பொதுப் பிரச்சினை என்று வரும் போது இந்திரா காங்கிரஸ் கட்சியினர் விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்றும் நேற்று முன் தினம் சட்டப் பேரவையில் நிகழ்ந்த சம்பவம் இதற்கு ஓர் உதாரணம் என்றும் அவர் கூறினார்.

## மகளிர்தின கருத்தரங்குகள்

[தொல்புரம்]

எதிர்வரும் அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் விசேட கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி கருத்தரங்கு வட்டுக்கோட்டை துணைவி, தமிழன் சனசமூக நிலையத்தின் நிலைய மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணியளவில் இடம் பெறவுள்ளது என சங்கானை வட்டவைப் பொறுப்பாளர் திரு. மதிஅண்ணா தெரிவித்துள்ளார்.

மேலும் சனிக்கிழமை மாலை ஆறு மணியளவில் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய முன்றலிலும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பு செல்லும் அரச ஊழியர் பதிவு செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிற்கு உத்தியோக பூர்வமான அலுவல்கள் காரணமாக செல்வதற்காக யாழ். அரச அதிபருடாக விண்ணப்பித்த நாற்பது அரசாங்க உத்தியோகஸ்தர்களும் யாழ். சர்வதேச செஞ்சிலுவைக் காரியாலயத்தில் தங்களுக்கான விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து கொள்ளுமாறு யாழ். செயலகவட்டாரங்கள் அறிவித்துள்ளன.

யாழ். அரச அதிபரிடம் இவ்வாறு கோரி சுமார் எண்பது அரச உத்தியோகஸ்தர்கள் விண்ணப்பித்திருந்த போதும் நாற்பது பேரே கொழும்பு செல்ல அனுமதிக்கப்படுவதாக தெரியவருகின்றது. இவர்கள் எதிர்வரும் 14-ம் திகதி கொழும்புநோக்கி புறப்படவுள்ள "குமண"க் கப்பலில் அழைத்துச் செல்லப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது.

### தமிழக சட்ட சபையிலிருந்து

# காங்கிரஸ் உறுப்பினர்கள் காவலரால் வெளியேற்றம்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையிலிருந்து நேற்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள்.

பேரவையில் நேற்று முதலமைச்சர் ஜெயலலிதா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மாநில ஒளிபரப்புக்கான நேரம் மாற்றி அமைக்கப்பட்டது சம்பந்தமான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார். இதை முன்மொழிந்த அவர், மத்திய அரசு தொலைக்காட்சியில் தமிழ்மொழி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் நேரத்தை மாற்றி இந்தி மொழி நிகழ்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பதாகவும், இது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பெரும்பாலான தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் இந்தி மொழியிலேயே அமைந்திருப்பது இந்தி திணிப்பு தீவிரப்படுத்தியுள்ளதோ என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி ஒரு பதற்ற நிலையை உருவாக்கியிருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார்.

இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சர் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தின் மீது தமது கட்சியின் கருத்துக்களை தெரிவிக்க வேண்டியிருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் எஸ் ஆர் பாலசுப்பிரமணியம் கூறியதை அடுத்து அக்கட்சியின் பேச்சாளராகப் பீற்றர் அல்போன்ஸ் பேசுவதற்கு அழைக்கப்பட்டார். அவர் பேசிக்கொண்டிருந்த போது முதலமைச்சர் குறுக்கிட்டார்.

தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அப்போது இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆட்சேபங்களையும், கோஷங்களையும் எழுப்பினார்கள். இந்தக் கட்டத்தில் சபாநாயகர் குறுக்கிட்டு எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் உட்படக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் பெயர் சொல்லி அழைத்து, ஒவ்வொருவராக அவையை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டார்.

பாலசுப்பிரமணியத்தை வெளியேற்றமுடியாதவகையில் மற்றக் காங்கிரஸ் உறுப்பினர்கள் சபாநாயகர் இருக்கை ...

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 10-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8255

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27 5535, 24-9830, 41-6296, 28-3306, 27-8125, 24-6759, 41 9038, 28 1020, 28-3528, 28-9634, 27-5799, 26-1019, 42-9625, 26-4579, 28-8117, 24-4465,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

24-4560, 26-1791, 26 5351, 27-1939, 26-495, 26-1724, 24-6431, 26 691, 40-7583, 28 4255, 24 3412, 43-517, 40-2249, 41-9167, 40-1737, 24-7340, 24-5036, 27-4024, 42-2364, 24-9938,

## தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

# 45-ம் நாள் வீரவணக்கம்

29-1 -92 அன்று மன்னாரில் எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட 2வது லெப். அமலனுக்கு எங்கள் வீரவணக்கம்



**2 வது லெப். அமலன்**

**(அருளானந்தம் லிங்கநாதன்)**

யாழ். வீதி - மானிப்பாய்

பிறப்பு:- 13-01-76 — வீரச்சாவு:- 29-12 92

இந்தித் திணிப்பைக் கண் டிக்காமல் அதை ஆதரிக்கும் வகையில் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் சட்டப் பேரவை யில் நடந்து கொண்டதாகக் குறை கூறி அக் கட்சியுடன் இனி உறவு கிடையாது என்று குறிப்பிட்டனர்

இந்த ஆறு அமைச்சர்களும் கட்சியின் பொறுப்புகளிலும்

## காவலரால் வெளியேற்றம்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவை யிலிருந்து நேற்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் அனை த்து உறுப்பினர்களும் பலவந்த மாக வெளியேற்றப்பட்டார் கள்.

பேரவையில் நேற்று முதல மைச்சர் ஜெயலலிதா தொலை க்காட்சி நிகழ்ச்சிகளின் மாநில ஒலிபரப்புக்கான நேரம் மாற்றி அமைக்கப்பட்டது சம்பந்தமான தீர்மானம் ஒன் றைக் கொண்டு வந்தார். இதை முன்மொழிந்த அவர், மத்திய அரசு தொலைக் காட்சியில் தமிழ்மொழி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் நேரத்தை மாற்றி இந்தி மொழி நிகழ்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப் பதாகவும், இது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருப் பதாகவும் குறிப்பிட்டார்.

பெரும்பாலான தேசிய ஒலி பரப்பு நிகழ்ச்சிகள் இந்தி மொழியிலேயே அமைந்திருப் பது இந்தி திணிப்பு தீவிரப் படுத்தியுள்ளதோ என்ற அச் சத்தை மக்கள் மத்தியில் ஏற் படுத்தி ஒரு பதற்ற நிலையை உருவாக்கியிருப்பதாகவும் முத லமைச்சர் கூறினார்.

இந்தத் தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றித் தரும் படி சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா கேட்டுக்கொண் டார்.

முதலமைச்சர் முன்மொழி ந்த இந்தத் தீர்மானத்தின் மீது தமது கட்சியின் கருத் துக்களை தெரிவிக்க வேண்டி யிருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் எஸ் ஆர் பாலசுப் பிரமணியம் கூறியதை அடுத்து அக்கட்சியின் பேச்சாளராகப் பீற்றர் அல்போன்ஸ் பேசுவத ற்கு அழைக்கப்பட்டார். அவர் பேசிக்கொண்டிருந்த போது முதலமைச்சர் குறுக்கிட்டார்.

தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், காங் கிரஸ் கட்சி உறுப்பினர்களுக் கும் இடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

அப்போது இந்திரா காங்கி ரஸ் உறுப்பினர்கள் ஆட்சேப ங்களையும், கோஷங்களையும் எழுப்பினார்கள். இந்தக் கட் டத்தில் சபாநாயகர் குறுக் கிட்டு எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணி யம் உட்பட காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் பெயர் சொல்லி அழைத்து, ஒவ்வொருவராக அவையை விட்டு வெளியேறுமாறு உத் தரவிட்டார்.

பாலசுப்பிரமணியத்தை வெளியேற்றமுடியாதவகையில் மற்றக் காங்கிரஸ் உறுப்பினர் கள் சபாநாயகர் இருக்கை அருகே உட்கார்ந்து கொண்டு மறியலில் ஈடுபட்டார்கள். அனைத்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களையும் பலவந்த மாக வெளியேற்றுமாறு சபா நாயகர் உத்தரவு பிறப்பித் ததைத் தொடர்ந்து பொலி சார் மூலம் அவர்கள் வெளி யேற்றப்பட்டார்கள். அப் போது அவர்கள் அரசுக்கு எதிராகவும், சபாநாயகருக்கு எதிராகவும் கூக்குரல் எழுப் பினார்கள்.

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 10-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8255

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27 5535, 24-9830, 41-6296, 28-3306, 27-8125, 24-6759, 41 9038, 28 1020, 28-3528, 28-9634, 27-5799, 26-1019, 42-9625, 26-4579, 28-8117, 24-4465,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

24-4560, 26-1791, 26 5351, 27-1939, 26-495, 26-1724, 24-6431, 26 691, 40-7583, 28 4255 24 3412, 43-517, 40-2249, 41-9167, 40-1737, 24-7340, 24-5036, 27-4024, 42-2364, 24-9938,

## தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

### உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

**கல்வித்தகைமைகள் :-** 8-ம் வகுப்பு தொடக்கம் க.பொ.த(உயர்தரம்)வரை

**உயரம்** :- 5' 6"

**வயது** :- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 20.2.93 ஆம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல்துறை அலுவல கத்திற்கு நேரடியாகச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங் கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்,

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படாதவர்களும், நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக் கப்படாதவர்களும் உடனடியாகச் சமுகம் தரவும்.

**பா. நடேசன்**
பொறுப்பாளர்,
காவல் துறை,
தமிழீழம்.

(சி/5973)

## சிறப்பு தகைமை

இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் வரும் சனிக் கிழமை காலை பத்து மணிக்கு அருட் திரு பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் நடை பெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசி ரியர் ஆ. துரைராசா, கல்விப் பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் தமிழீழக் கல்விப்பொறுப்பா ளர் வெ. இளங்குமரன், வீடு தலைப் புலிகள் பிரமுகர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் விருந்தினராகக் கலந்துகொள் வார்கள்.

★ பரிசளிப்பிற்குத் தெரி வானோர் விபரம் நாளைய ஈழநாதத்தில் வெளிவரும்.



## 2 வது லெப். அமலன்

### (அருளானந்தம் லிங்கநாதன்)

யாழ். வீதி – மானிப்பாய்

பிறப்பு:- 13-01-76 — வீரச்சாவு:- 29-12 92

எழுவானில் கதிராக எழுந்தாய்
எங்கெங்கோ களமாடத் திரிந்தாய்
நிலம்வேண்டும் என்றே நீ நிமிர்ந்தாய்
நினைவெல்லாம் விடுதலையாய் நிறைந்தாய்
அமலா! உன் நினைவிங்கு வாழும்
அழகான தமிழீழம் சேரும்
உலகாளும் தமிழோடு சேர்ந்து
உன்நாமம் எம்மண்ணில் ஆடும்.
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

(சி/5946) - மன்னார் தொடர்பகம்

## 'கிறாஸ்கொப்பேர்ஸ்' ஆதரவில்

## காட்சி உதைபந்தாட்டம்

### காணத் தயாராகுங்கள்

மல்லாகம் *R. D. S.* விளையாட்டரங்கில்

இம் மாதம் 12, 13, 14ஆம் திகதிகளில்

மாலை:- 3-00 முதல்

(தினமும் இரண்டு போட்டிகள்)

'கிறாஸ்கொப்பேர்ஸ்'
தெல்லிப்பழை.

(சி-5984)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது